# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சார்வரி, ஆவணி 31, திருவள்ளுவர் ஆண்டு–2051

## 2020 செப்டம்பர் 16, புதன்கிழமை

*சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*

*எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."*

*பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

**சாலை அமைத்தல்**

***13050—திரு. மு.பெ. கிரி:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, நீப்பத்துறை கொட்டாவூர் முதல் அரூர் தொகுதி, கருங்கல்பாடி வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2020 செப்டம்பர் 16

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையை இந்தக் கொரோனா வைரஸ் தொற்று காலத்திலும், கலைவாணர் அரங்கத்தில் களைகட்ட வைத்து, ஜனநாயகத்தின் மாண்பை நிலைநிறுத்தி, சபாநாயகர் இருக்கைக்கு சரித்திரப் புகழ் சேர்க்கும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வருடங்கள் கரைந்தாலும், வளர்பிறை சந்திரனாய் நிலைத்த புகழ்கொண்ட நிகரில்லா வள்ளல் புரட்சித் தலைவர் விதை ஊன்றிய இயக்கத்தின் வாகைக்கும், ஈகைக்கும் இலக்கணம் வகுத்து, இந்தியத்தின் அரசியலை விந்தியத்திற்குத் தெற்கே திருப்பிக் காட்டிய வெற்றித் திருமகள் அமைத்துத் தந்த அரசாட்சியை, கம்பீரம் குன்றாத அழகோடு, நாடே வியக்கும்வண்ணம் நல்லாட்சிக்கு சான்றாக்கி, வெற்றிமேல் வெற்றிகளைக் குவிக்கும் விவசாய வீட்டில் பிறந்த வெள்ளந்தி தலைவன், கரிகால்சோழனை (மேசையைத் தட்டும் ஒலி) கண் முன்னே நிறுத்தும் கல்லணையின் நாயகன், காவேரி காவலன், திரைகடல் ஓடி முதலீடுகள் பெருக்கி வந்த முதல்வருள் முதல்வன், மாணவச் சமூகத்தின் மன அழுத்தத்தை மறையச் செய்ய நடவடிக்கை எடுத்துவரும் மாண்புமிக்க முதல்வர், எட்டுத் திக்கும் போற்றுகின்ற எங்கள் எளிமை சாமானியர் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரில்லா இயக்கத்தின் தாயுமானவர், தாய் ஒப்படைத்த அரசுக்கு இடக்கரமாய், வலக்கரமாய் துணையிருந்து பாடுபடும் கழகத்தின் இணையில்லா சொத்து, பைந்தமிழ் பூமியின் நிதிநிலை அறிக்கையை தொடர்ந்து 10 ஆண்டுகள் சமர்ப்பித்த கைராசியான, கண்ணியமிக்க துணை முதல்வர் மாண்புமிகு ஓ.பி.எஸ். அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கிரி அவர்கள் எழுப்பிய வினாவிற்கு விடை. திருவண்ணாமலை தெற்கு வனக் கோட்டம், செங்கம் சரகத்திற்குட்பட்ட ராவந்தவாடி காப்புக் காட்டின் வடபுறத்தில் நீப்பத்துறை கொட்டாவூர் கிராமமும், தென்புறத்தில் அரூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல்பாடி கிராமமும் அமைந்துள்ளன. இவ்விரு கிராமங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் சுமார் 2.3 கி.மீ. தூரத்திற்கு, மேற்கண்ட ராவந்தவாடி காப்புக் காட்டில் வனச் சட்டம், பிரிவு 16-ன்கீழ் 6 அடி அகலத்திற்கு வழித்தடம்,

*2020 செப்டம்பர் 16]*

*மண் சாலை அமைக்க அறிவிக்கை செய்ய அனுமதிக்கப்பட்டு, தற்போது அவ்வழியினை பொதுமக்கள் உபயோகப்படுத்தி வருகின்றனர். எனினும், இந்த மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலர், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, வன நிலம் ஒதுக்கக் கோரிய பிரேரணையை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்பட்சத்தில், வனப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விதிகளுக்குட்பட்டு, சாலை அமைக்க வன நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

**திரு. மு.பெ. கிரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை, நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியாரின் பிறந்த தினம். மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு என்று சொன்ன தந்தை பெரியாரை வணங்குகின்றேன். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, நம்மையெல்லாம் இங்கே ஆளுகின்ற இடத்திலே அமர்த்திய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நேற்று பிறந்த நாள்; அவரையும் வணங்குகின்றேன். அண்ணா வழியில், 'அயராது உழைப்போம்; ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்; இந்தித் திணிப்பை என்றுமே எதிர்ப்போம்; வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்; மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்று முழங்கி, 50 ஆண்டுக்காலம் சட்டமன்றப் பேரவையிலே பணியாற்றி, சட்டத்தாலும், திட்டத்தாலும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை தலைநிமிரச் செய்த தலைவர் கலைஞரை வணங்குகின்றேன்.*

*முற்பகல் 10–05*

*'கலைஞரின் கட்டளையை கண்போல் காப்போம்; தமிழகத்தில் தமிழை வளர்ப்போம்; அதிகாரக் குவியலை அடித்து நொறுக்குவோம்; மத வெறியை மாய்த்து, மனித நேயம் காப்போம்; வளமான தமிழகத்தை வளர்த்தெடுப்போம்' என்று சொல்லி, தமிழ்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களை மட்டுமல்ல, இந்திய*

திருநாட்டில் வாழ்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமூக நீதியைப் பெற்றுத் தந்த, சமூக நீதியின் பாதுகாவலர்; வருங்கால தமிழகத்தின் விடிவெள்ளி; கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர், ஓமந்தூரார் வளாகத்திலே இந்த மாமன்றத்தை நடத்த வேண்டுமென்று எண்ணினார்கள். அதை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்களையும் வணங்குகின்றேன்.

செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீப்பத்துறையையும், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியையும் இணைக்கின்றது இந்தச் சாலை. தொடர்ந்து நீண்டகாலமாக மக்கள் அந்தச் சாலையில் செல்ல வழியில்லாமல் இருக்கிறது. வனத் துறையின் அச்சுறுத்தலோடு மக்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலையை அமைத்துத்தர வேண்டுமென்று கூறுவதற்குக் காரணம் இந்தச் சாலை செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்கம், தண்டராம்பட்டு, ஜவ்வாதுமலை ஆகிய ஒன்றியங்களை இணைக்கின்றது. சட்டமன்ற உறுப்பினரான நான் செங்கத்திலிருந்து தண்டராம்பட்டு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 90 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக் கொண்டுதான் தண்டராம்பட்டு தாலுகாவிற்குச் செல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு துணைக் கேள்வியைக் கேட்க நீங்கள் ஐந்து நிமிடங்களை எடுத்துக்கொண்டீர்களென்றால், நான் எப்படி சபையை நடத்துவது? கேள்வியைக் கேட்டு முடியுங்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பணியாற்றும் சட்டமன்ற உறுப்பினரே 90 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக்கொண்டுதான் செல்ல வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் அந்தச் சாலையை அமைத்துத் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள்; அரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சம்பத் அவர்களும், நானும் சேர்ந்து அந்தச் சாலையை அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நிதியை ஒதுக்கி, வனத் துறையினரின் அனுமதியைப் பெற்றுத் தர வேண்டுமென்று

*2020 செப்டம்பர் 16]*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* B.D.O. *மூலமாக வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வன நிலம் ஒதுக்கக் கோரிய பிரேரணையை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்பட்சத்தில், வனப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விதிகளுக்குட்பட்டு, சாலை அமைக்க வன நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

**திரு. மு.பெ. கிரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதிக்கு, செங்கத்திலிருந்து பரமனந்தல், மேல்பட்டு வழியாகச் செல்ல வேண்டும். ஒரு காலத்தில் சாலையே இல்லாமல் அந்தப் பகுதி வெறும் கரடு, முரடாக இருந்தது. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இன்றைய கழகத்தின் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது பெரும் நிதியை ஒதுக்கித் தந்து, சாலை அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அந்தச் சாலையை அமைப்பதற்கு இரண்டு முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஜவ்வாது மலையிலிருந்து பரமனந்தல், மேல்பட்டு வழியாகச் செல்லும் அந்தப் பாதை மிகவும் கரடு, முரடாக இருந்த காரணத்தினால், உள்ளாட்சித் துறையால் பணி வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் அந்தப் பணியை மேற்கொள்ளத் தயங்கினார்கள். அன்றைக்கு உணவுத் துறை அமைச்சராகப் பணியாற்றியவரும், தற்போது திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான திரு. எ.வ. வேலு அவர்கள், ஒப்பந்ததாரர்களை அழைத்து, சமரசம் செய்து, 'இரண்டு முறை ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது; மூன்றாவது முறையும் இரத்தானால், ஒதுக்கப்பட்ட நிதியும் இரத்தாகிவிடும்'*

*எனத் தெரிவித்ததன் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட நிதியின்மூலம் சிறப்பான சாலை அமைக்க வேண்டுமென்று, அன்றைக்கு உள்ளாட்சித் துறையின்மூலம் எங்கள் ஆட்சியிலேயே சாலை அமைக்கப்பட்டு இன்றுவரை பத்து ஆண்டுக்காலம் ஆகிறது. இருப்பினும், தொடர்ந்து அந்தச் சாலையிலே மக்கள் செல்ல முடியாமல், போக்குவரத்து வசதியில்லாமல் அரசின் நிதி வீணடிக்கப்பட்டு இருக்கிறதேதவிர மக்கள் பயன் பெறவில்லை. எனவே, அந்தச் சாலைக்கு தடுப்புச் சுவர் அமைத்து, வனத் துறையின் மூலமாக போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5-7-2019 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளபடி, வனப் பகுதிகளிலுள்ள வனச் சாலைகளைப் பராமரித்து, மேம்படுத்திட 200 கோடி ரூபாய் அளவில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், நடப்பாண்டில் 577 கிலோ மீட்டர் நீளம் உள்ள வனச் சாலைகளை மேம்படுத்திட 57.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்படி, தற்போது 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வனச் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கொரோனா வைரஸ் தொற்று நோயினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள், மீண்டும் தொடரப்படும் என்கின்ற சூழ்நிலையில், இப்போது அப்பணிகள் ஒவ்வொரு இடத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அவருடைய பகுதிக்கு, வனத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, சாலைகளைச் செப்பனிடும் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2020 செப்டம்பர் 16*]

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**12—**

**மின்மாற்றி**

***43423—திரு. சபா. ராசேந்திரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு குடியிருப்புப் பகுதி தெற்கு தெருவிற்கு தனியாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் மாளிகம்பட்டு ஊராட்சி, தெற்கு தெருவில் புதிய மின்மாற்றி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். 1–3–2019 அன்று ஒரு புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கேள்வியை இதற்கு முன்பாகக் கேட்டிருப்பார் என்று நினைக்கின்றேன். அங்கு இப்போது 50 சதவிகிதம் அளவிற்குத்தான் மின்பளு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேறு ஏதாவது பகுதியில் அதுபோன்ற நிலை இருக்குமென்று சொன்னால், உடனடியாக அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*